பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

07 10 2024 **MONDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. நக்சலைட் பிரச்சினைகளால் ஏற்படும் உயிரிழப்புகள் 70 சதவீதம் குறைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

2. விமானப்படையின் வான் சாகச நிகழ்ச்சியின்போது உயிரிழந்த பார்வையாளர்கள் ஐந்து பேரின் குடும்பத்தினருக்கு தலா ஐந்து லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

3. மாநில அரசு உரிய முன்னேற்பாடுகளை மேற்கொள்ளாததே பார்வையாளர்கள் உயிரிழந்ததற்கு காரணம் என்று அஇஅதிமுக, பிஜேபி, பாமக, தேமுதிக ஆகிய கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

4. திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமுதல், மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. உலக ஜூனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Dhruv Negi**, **Numair Shaik** மற்றும் **Tanvi Sharma** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

*----- இனி விரிவான செய்திகள் ----*

**<<<<<>>>>>**

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் நக்சலைட் பிரச்சினைகள் வெகுவாக குறைந்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில், நக்சலைட் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மாநிலங்களின் முதலமைச்சர்கள் பங்கேற்ற கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

நக்சலைட் தாக்குதலினால் ஏற்படும் உயிரிழப்புகள் 70 சதவீதம் குறைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

வளர்ச்சிக்கு தடையாக நக்சலைட் பிரச்சினை உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

நக்சலைட்டுகளை முற்றிலுமாக ஒடுக்க மாநில அரசுகள், மத்திய அரசோடு இணைந்து செயல்பட வேண்டும் என்றும் திரு அமித் ஷா கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

உலகின் மிகப்பெரிய மருத்துவ காப்பீட்டுத்திட்டம் நம் நாட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்காசிய மண்டலத்தின் குழு கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

இந்த திட்டம் தற்போது 70 வயதுக்கும் மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

டிஜிட்டல் சுகாதார சேவைகளை வழங்குவதில் இந்தியா முன்னணியில் இருப்பதாகவும் திரு ஜெ பி நட்டா தெரிவித்தார்.

<<<<<>>>>>

சென்னையில் நடைபெற்ற விமானப்படையின் வான் சாகச நிகழ்ச்சியை காண வந்தவர்களில் உயிரிழந்த ஐந்து பேரின் குடும்பத்தினருக்கு தலா ஐந்து லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், எதிர்காலத்தில் இதுபோன்ற பெரிய நிகழ்ச்சிகளுக்கு கூடுதல் கவனத்துடன் ஏற்பாடுகள் செய்யப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே, இந்த உயிரிழப்பு சம்பவத்திற்கு தமிழக அரசின் நிர்வாகத் திறமையின்மையே காரணம் என்று அஇஅதிமுக, பிஜேபி, பாமக, தேமுதிக ஆகிய கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

ஐந்து பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சி, தமிழக அரசை வலியுறுத்தியுள்ளது.

<<<<<>>>>>

தமிழக அரசின் மக்களை தேடி மருத்துவம் திட்டத்திற்கு ஐ நா-வின் விருது கிடைத்துள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து கடந்த ஜூன் மாதம் வரை ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இத்திட்டத்தின்கீழ், மூன்று கோடிக்கும் மேற்பட்டோர் தொடர் சிகிச்சை மேற்கொண்டு வருவதாகவும் திரு மா. சுப்பிரமணியன் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்வதற்கு தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ராஜேந்திரன் கூறியுள்ளார்.

இன்று சேலத்தில் இதுதொடர்பாக அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு அவர் பேசினார்.

பருவமழையால் அதிகமாக பாதிக்கப்படக்கூடும் என கண்டறியப்பட்டுள்ள பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

மழை காலங்களில் சாலையில் ஏற்படும் சேதங்கள் உடனுக்குடன் சரி செய்யப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஏற்காடு மலைப்பகுதியில் மண் சரிவு ஏற்படக்கூடிய சூழல் இருப்பதால், எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என்றும் திரு ராஜேந்திரன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடப்பாண்டில் 100 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளதாக கூட்டுறவுத்துறை கூடுதல் தலைமை செயலர் டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இன்று தூத்துக்குடியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கால்நடை பராமரிப்பு கடனாக 99 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 210 கோடி ரூபாய் அளவிற்கு கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், இதுவரை ஆயிரத்து 69 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கன முதல், மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - (1) 45 செகண்ட்ஸ்)*

கடல் பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அடுத்த ஐந்து நாட்களுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் திரு செந்தாமரை கண்ணன் அறிவுறுத்தினார்.

*<u>(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - (2) 19 செகண்ட்ஸ்)</u>*

<<<<<>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அரசு நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு இரண்டாம் பருவ பாடப்புத்தங்களை ஆட்சியர் திரு இளம்பகவத் இன்று வழங்கினார்.

<<<<<>>>>>

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் வட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 24 பழங்குடியினருக்கு வீட்டுமனை பட்டாக்களை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று வழங்கினார்.

<<<<<>>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு பிரசாந்த் இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

<<<<<>>>>>

திருப்பத்தூர் மாவட்டம் புதூர்நாடு மலைகிராமத்தில் உள்ள நாடக கலைஞர்களுக்கு ஒரு லட்சத்து 21 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான இசைக்கருவிகளை ஆட்சியர் திரு தர்பகராஜ் இன்று வழங்கினார்.

<<<<<>>>>>

நாகை மாவட்டத்தில் “பெண் குழந்தைகளை காப்போம் அவர்களுக்கு கல்வி கற்பிப்போம்” குறித்த விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

<<<<<>>>>>

தருமபுரி மாவட்டத்தில் பேரிடர் காலங்களில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தீயணைப்புத்துறை சார்பில் நடத்தப்பட்டு வருகின்றன.

<<<<<>>>>>

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழைக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மேயர் திருமதி பிரியா தலைமையில் இன்று நடைபெற்றது

<<<<<>>>>>

***விளையாட்டுச் செய்திகள்***

உலக ஜூனியர் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

பெருவின் லிமாவில் நடைபெற்ற இப்போட்டியின் கடைசி நாளில் ஆடவர் குழு பிரிவுகளில் இந்தியா ஒருதங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Parisha Gupta** வெள்ளிப்பதக்கத்தையும், **Mukesh** வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா 13 தங்கம், 3 வெள்ளி, 8 வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் முதலிடத்தை பிடித்தது.

<<<<<>>>>>

உலக ஜூனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Dhruv Negi** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

சீனாவின் **Nanchang** –ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், அவர் 21-8, 21-14 என்ற செட் கணக்கில், ஸ்லோவேக்கியாவின் **Alex Petrovic** –ஐ வென்றார்.

மற்றொரு ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் **Numair Shaik** 21-7, 21-10 என்ற செட் கணக்கில், போர்ச்சுக்கல்லின் **Alexandre Dernardo** –வை வென்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

19 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் **Tanvi Sharma,** 21-11, 21-9 என்ற செட் கணக்கில், ஹாங்காங்கின் **Lee Hoi Lam Joan** –ஐ வென்று இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் **Bhavya Chhabra – Taarini Suri** இணையும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

<<<<<>>>>>

ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டி கஜகஸ்தானின் அஸ்தானாவில் இன்று தொடங்கியது.

<<<<<>>>>>

உகாண்டாவில் நடைபெற்ற சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியா மூன்று தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

<<<<<>>>>>

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மற்றொரு முதல் சுற்று ஆட்டத்தில் அபய் சிங், 11-5, 7-11, 11-9, 11-3 என்ற செட் கணக்கில், கொலம்பியாவின் **Juan Camilo Vargas -**ஐ வென்றார்.

**<<<<<>>>>>**

ஜிம்னாஸ்டிக் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக இந்தியாவின் **Dipa Karmakar** அறிவித்துள்ளார்.

**<<<<<END>>>>>**